IN THE COURT OF JUDICIAL MAGISTRATE ARAKKONAM, VELLORE DISTRICT

PAGE NO.54/2024
DEPOSITION OF WITNESS
(Chapter XXIIII of Criminal Procedure

| | | |
|---|---|---|
| Calender | : | CC.60/2020 PW-3 |
| Name | : | சிவராஜ் |
| Father Name | : | தங்கவேலு |
| Village | : | அரக்கோணம் |
| Calling | : | சவுண்டு சர்விஸ் |
| Religion | : | இந்து |
| Age | : | 70 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 15.03.2024.

( எதிரிகள் ஆஜர் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )

முதல் விசாரணை சத்தியப்பிராமணம் செய்யப்பட்டது.

எனக்கு இந்த வழக்கு பற்றி தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணம்(பார்வை மகஜர்) யில் உள்ள கையெழுத்து என்னுடையது போல் இருக்கிறது. கைகெழுத்தை எதற்கு போட்டேன் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத கோரி அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டு கு.வி)

கையெழுத்து எப்போது எங்கு போட்டேன் என்றால் காவல் நிலையத்தில் சவுண்டு சர்வுஸ் அனுமதி பெறுவதற்கு சென்றபோது போட சொன்னார்கள் போட்டேன். ஆஜர் எதிரிகளை தெரியுமா என்றால் தெரியாது. கையெழுத்து போட சொன்னபோது எதற்கு என்று கேட்டவில்லையா என்றால் கேட்டகவில்லை. சவுண்டு சர்விஸ் அனுமதி கேட்க போனபோது போட சொன்னார்கள் போட்டேன்.

போலிஸ்சார்கேட்டால் கேட்காமல் கையெழுத்து போடுவேனா என்றால் அதிகாரி என்பதால் போட்டேன்.

2.கடை எங்கு வைத்துள்ளேன் என்றால் ஏ.எம் கண்டிகை என் வீட்டில் வைத்துள்ளேன். இதற்கு முன்பு சுவால்பேட்டையில் வாடகைக்கு வைத்திருந்தேன்.2018 ல் எங்கு வைத்திருந்தேன் என்றால் வீட்டில் வைத்திருந்தேன். எதிரிகள் இருவரும் வழக்கு குற்றவாளிகள் என்றாலும் அந்த வழக்கில் போலிசார் என்னை சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்றாலும் தற்போது நான் எதிரிகளை காப்பற்ற பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் கையெழுத்து இடவில்லை என்றாலும் சம்பவ இடத்தில் போலிசார் தயார் செய்த பார்வை மகஜரில் கையெழுத்து போட்டேன் என்றால் இல்லை.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை